ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2123/70 - 2019 මැයි මස 16 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.05.16
2123/70 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆந் திகதி வியாழக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம்**

பிரிவு 4(2) இன் படியான பிரசுரித்தல்

இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு (இதன் பின்னர் “நிறுவகம்” எனக் குறிப்பிடப்படும்) வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, 1995 ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத் தேவைகளுக்காக இத்துடன் பிரசுரித்துள்ள இலங்கை கணக்கீட்டு நியமம் SLFRS 3 வணிக இணைப்புக்கள் (ஒரு வணிகத்திற்கான வரைவிலக்கணம்) நியமத்துக்கான திருத்தங்கள் இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டு சனவரி மாதம் 01ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் காலத்தை அடக்கும் நிதிக்கூற்றுக்களுக்கு நடைமுறைக்கு வருகின்றது. முன்கூட்டிய பிரயோகம் அனுமதிக்கப்படும்.

பேரவையின் கட்டளைப்படி,

**பிரசன்ன லியனகே,**
செயலாளர்.

இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம்,
இல. 30 A,
மலலசேகர மாவத்தை,
கொழும்பு 07,
2019, மே 16.


இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# ஒரு வணிகத்திற்கான வரைவிலக்கணம்

## SLFRS 3 இற்கான திருத்தங்கள்

### SLFRS 3 *வணிக இணைப்புக்கள்* நியமத்திற்கான திருத்தங்கள்

பந்தி 3, பின்னிணைப்பு A இல் உள்ள ''வணிகம்'' என்ற பதத்திற்கான வரைவிலக்கணம் மற்றும் பந்தி B7- B9, B11 மற்றும் B12 ஆகியன திருத்தப்பட்டுள்ளன. பந்தி 64P, B7A, B7C, B8A மற்றும் B12A-B12D அத்துடன் பந்திகள் B7A, B8 மற்றும் B12 ஆகியவற்றுக்கு மேலுள்ள தலைப்புக்கள் சேர்க்கப்பட்டுள்ளன. பந்தி B10 நீக்கப்பட்டுள்ளது. புதிய உரை அடிக்கோடிட்டுக் காட்டப்பட்டு உள்ளதோடு நீக்கப்பட்ட உரை வெட்டிக் காட்டப்படுகின்றது.

## வணிக இணைப்பு ஒன்றினை அடையாளம் காணல்

**3 ஊடுசெயல் அல்லது ஏனைய நிகழ்வானது வணிகத்தினை உருவாக்குகின்ற கையகப்படுத்தப்பட்ட சொத்துக்களையும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பரிப்புக்களையும் வேண்டுகின்ற இந்த SLFRS இன் வரைவிலக்கணத்தை பிரயோகிப்பதன் மூலமான வணிக இணைப்பாக காணப்படுகிறதா என்பதை உரிமம் தீர்மானிக்க வேண்டும். கையகப்படுத்தப்பட்ட சொத்துக்கள் வணிகமாகக் காணப்படவில்லையாயின், அறிக்கையிடும் உரிமமானது சொத்தொன்றின் கையகப்படுத்தலை ஏனைய நிகழ்வு அல்லது நடவடிக்கையாகக் கணிக்கீடு செய்யும். பந்திகள் B5 – ~~B12~~ B12D வணிகத்தின் வரைவிலக்கணம் மற்றும் வணிக இணைப்பின் இனங்காணல் என்பவற்றிற்கான வழிகாட்டலை வழங்குகிறது.**

## விளைவுக்கு வரும் திகதி மற்றும் நிலைமாறுகை

### விளைவுக்கு வரும் திகதி

...

64P நவம்பர் 2018இல் வெளியிடப்பட்ட, வணிகத்திற்கான வரைவிலக்கணமானது, பந்திகள் B7A-B7C, B8A மற்றும் B12A –B12D ஆகியன சேர்க்கப்பட்டு பின்னிணைப்பு A இல் வணிகம் என்ற பதத்திற்கான வரைவிலக்கணத்தை திருத்தியதோடு, பந்தி 3, B7-B9, B11 மற்றும் B12 ஆகியன திருத்தப்பட்டதோடு பந்தி 10 நீக்கப்பட்டது. கையகப்படுத்தல் திகதியானது 2020 ஜனவரி 1 அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் முதலாவது வருடாந்த அறிக்கையிடும் காலத்தின் தொடக்கத்திலோ அல்லது அதற்குப் பின்னரான வணிகச் சேர்க்கைகளுக்கும் மற்றும் அக்காலப்பகுதியின் தொடக்கத்திலோ அல்லது அதற்குப் பின்னராகவோ நிகழும் பொழுது, சொத்து கையகப்படுத்தல்களுக்கு ஒரு உரிமம் இந்த திருத்தங்களைப் பிரயோகிக்கும். இந்தத் திருத்தங்களின் முற்காலப் பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. உரிமம் முற்காலங்களுக்கு இந்த திருத்தங்களைப் பயன்படுத்தினால் அவ்விடயம் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

## பின்னிணைப்பு அ

## வரையறுக்கப்பட்ட பதங்கள்

...

**வணிகம்** பங்காளிகள் அல்லது அங்கத்தவர்கள், ஏனைய உரிமையாளர்கள் அல்லது முதலீட்டாளர்களுக்கு நேரடியாக ஏனைய பொருளாதார நன்மைகள் அல்லது குறைந்த கிரயங்கள், பங்கிலாபங்கள் வாடிக்கையாளர்களுக்கு பொருட்கள் சேவைகளை வழங்குதல், முதலீட்டு வருமானத்தை உருவாக்குதல் (வட்டி அல்லது பங்குலாபம் போன்றவை) அல்லது வழமையான நடவடிக்கைகளிலிருந்து ஏனைய வருமானங்களை பிறப்பித்தல் போன்ற என்பவற்றின் வடிவில் வருவாயினை வழங்கும் நோக்கத்திற்காக நிர்வகிக்கப்படுகின்ற இயலளவையுடைய ஒன்றிணைக்கப்பட்ட நடவடிக்கைகளும் சொத்துக்களும்.

## வணிகமொன்றிற்கான வரைவிலக்கணம் (பந்தி 3 இன் பிரயோகம்)

B7 வணிகமானது உள்ளீடுகளையும் அவ் உள்ளீடுகளுக்கு பிரயோகிக்கப்படுகின்ற செயன்முறைகளையும் உள்ளடக்குகிறது. இது வெளியீடுகளை உருவாக்குவதற்கான பங்களிப்பை வழங்கும் திறனைக் கொண்டிருக்கும். பொதுவாக வணிகங்களானது வெளியீடுகளை கொண்டிருக்கின்ற போதிலும், வியாபாரமாக தகுதியுடையதாவதற்கு ஒன்றிணைக்கப்பட்ட தொகுதிக்காக வெளியீடுகளானது வேண்டப்படுவதில்லை. வணிகத்தின் மூன்று கூறுகளானது பின்வருமாறு வரையறுக்கப்படுகிறது. (வணிகத்தின் கூறுகள் குறித்த வழிகாட்டல்கள் தொடர்பாக பந்திகள் B8- B12 இனைப் பார்க்கவும்).

(அ) **உள்ளீடு**: ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட செயன்முறைகள் இதன்மீது பிரயோகிக்கப்படுகின்ற போது வெளியீடுகளை உருவாக்குவதற்கான பங்களிப்பை வழங்கும் திறனைக் கொண்டுள்ள அல்லது உருவாக்குகின்ற ஏதேனும் பொருளாதார வளம். உதாரணங்களாக, நடைமுறையல்லா சொத்துக்கள் (அருவச் சொத்துக்கள் அல்லது நடைமுறையல்லா சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கான உரிமை உள்ளடங்கலாக), புலமைச் சொத்து, அவசியமான மூலப்பொருள் அல்லது உரிமைகள் மற்றும் ஊழியர்களை பெறுவதற்கான திறன் என்பவற்றை உள்ளடக்குகிறது.

(ஆ) **செயன்முறை**: வெளியீடுகளை உருவாக்குவதற்கான பங்களிப்பை வழங்கும் திறனுடைய அல்லது வெளியீடுகளை உருவாக்குகின்ற வகையில் உள்ளீடு ஒன்றிற்கு அல்லது உள்ளீடுகளுக்குப் பிரயோகிக்கப்படுகின்ற ஏதாவது முறைமை, நியமம், சம்பிரதாய முறை, மரபுமுறை அல்லது விதிமுறை. உதாரணங்களாக, தந்திரோபாய முகாமைத்துவ செயன்முறைகள், தொழிற்பாட்டு செயன்முறைகள் மற்றும் வள முகாமைத்துவ செயன்முறைகள் என்பவற்றை உள்ளடக்குகிறது. இச்செயன்முறைகளானது பொதுவாக ஆவணப்படுத்தப்படுகிறது. ஆனால் மரபுகள் மற்றும் விதிமுறைகளை பின்பற்றுகின்ற முக்கியமான திறன் மற்றும் அனுபவத்தை கொண்டுள்ள ஒழுங்கமைக்கப்பட்ட ஊழியப் படையினது புலமை இயலளவானது வெளியீடுகளை உருவாக்குகின்ற உள்ளீடுகளுக்குப் பிரயோகிக்கப்படுவதற்கு அவசியமான செயன்முறைகளை வழங்கும். (கணக்கீடு, பட்டியலிடல், சம்பளப் பட்டியல், மற்றும் ஏனைய நிர்வாக முறைகள் பொதுவாக வெளியீடுகளை உருவாக்குவதற்கு பயன்படுத்தப்பட்ட செயன்முறைகளாக கருதப்படுவதில்லை).

(இ) **வெளியீடு**: அவ் உள்ளீடுகளுக்கு பிரயோகிக்கப்பட்ட செயன்முறைகள் மற்றும் உள்ளீடுகளின் பங்காளிகள் அல்லது அங்கத்தவர்கள், ஏனைய உரிமையாளர்கள் அல்லது முதலீட்டாளர்கள் ஆகியோருக்கு நேரடியாக ஏனைய பொருளாதார நன்மைகள் அல்லது குறைந்த கிரயங்கள், மற்றும் பங்கிலாபங்கள் என்பவற்றின் வாடிக்கையாளர்களுக்கு பொருட்கள் சேவைகளை வழங்குதல், முதலீட்டு வருமானத்தை உருவாக்குதல் (வட்டி அல்லது பங்குலாபம் போன்றவை) அல்லது வழமையான நடவடிக்கைகளிலிருந்து ஏனைய வருமானங்களை பிறப்பித்தல் போன்ற வடிவில் வருவாயினை வழங்குவதற்கான திறனைக் கொண்ட அல்லது வழங்கும் விளைவு.

## சீர்மதிப்பின் செறிவை அடையாளம் காண்பதற்கான விருப்பத் தெரிவுச் சோதனை

B7A இது ஒரு கையகப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் மற்றும் சொத்துக்களின் தொகுதி வணிகமில்லையா என்பதற்கான மதிப்பீட்டிற்காக பந்தி B7B ஆனது ஒரு விருப்புச்சோதனையை (செறிவுச் சோதனை) அமைக்கின்றது. ஒரு உரிமம் இச் சோதனையைப் பிரயோகிக்கத் தெரிவு செய்யலாம் அல்லது பிரயோகிக்காது விடலாம். ஒவ்வொரு ஊடுசெயல் அல்லது நிகழ்வுகளுக்கு தனித்தனியாக இத் தெரிவினை உரிமம் மேற்கொள்ளலாம். இச் செறிவுச் சோதனையானது பின்வரும் விளைவுகளைக் கொண்டிருக்கும்:

அ) செறிவுச் சோதனை திருப்தி செய்யப்பட்டால் நடவடிக்கைகள் மற்றும் சொத்துக்களின் தொகுப்பானது ஒரு வணிகமாக இருக்காது எனத் தீர்மானிக்கப்படுவதுடன், மேலதிக மதிப்பீடுகள் தேவைப்படாது.

ஆ செறிவுச் சோதனை திருப்தி செய்யப்படாவிட்டால் அல்லது சோதனை பிரயோகிக்கப்படாதிருக்க உரிமம் தேர்வு செய்தால், உரிமம் B 8 –B12D பந்திகளில் குறிப்பிட்ட மதிப்பீட்டை மேற்கொள்ளும்.

B7B கையகப்படுத்தப்பட்ட மொத்த சொத்துக்களினதும் சீர்மதிப்பு முழுதும் ஒரு அடையாளங் காணத்தக்க தனியான சொத்து அல்லது ஒத்த அடையாளங் காணத்தக்க சொத்துக்களின் குழுவில் சேர்க்கப்பட்டிருந்தால் செறிவுச் சோதனையானது திருப்தி செய்யப்பட்டதாக அமையும்.

அ) கையகப்படுத்தப்பட்ட மொத்த சொத்துக்கள் காசும் காசுக்கு சமமானவையும், பிற்போடப்பட்ட வரி சொத்துக்கள் மற்றும் பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புகளின் விளைவாக ஏற்படும் நன்மதிப்பு ஆகியவை தவிர்ந்ததாக இருக்கும்.

(ஆ) கையகப்படுத்தப்பட்ட சொத்துக்களின் சீர்மதிப்பானது, கையகப்படுத்தப்பட்ட தேறிய அடையாளம் காணத்தக்க சொத்துக்களின் சீர்மதிப்பை விட மிகையான மாற்றப்பட்ட எந்தவொரு பெறுமதியையும் (அத்தோடு கட்டுப்பாடற்ற அக்கறையுடைமையின் சீர்மதிப்பு மற்றும் முன்னர் வைத்திருந்த அக்கறையின் சீர்மதிப்பு) உள்ளடக்கும். கையகப்படுத்தப்பட்ட மொத்த சொத்துக்களின் சீர்மதிப்பானது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பரிப்புக்களின் சீர்மதிப்பு மீது, மாற்றப்பட்ட கைமானத்தின் சீர்மதிப்பை சேர்ப்பதன் மூலம் கையகப்படுத்தப்பட்ட மொத்தப் பெறுமதியை (அத்தோடு கட்டுப்பாடற்ற அக்கறையுடைமையின் சீர்மதிப்பு மற்றும் முன்னர் வைத்திருந்த அக்கறையின் சீர்மதிப்பு) (பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள் தவிர) ஒன்றுசேர்த்து, பின்னர் துணைப்பந்தி (அ) இல் அடையாளம் காணப்பட்ட உருப்படிகளைத் தவிர்ப்பதன் மூலம் அடையப்படும். இருப்பினும் கையகப்படுத்தப்பட்ட மொத்த சொத்துக்களின் சீர்மதிப்பு அந்த மொத்தத்தை விட அதிகமாகக் காணப்பட்டால் சில நேரங்களில் மிகவும் துல்லியமான கணித்தல் தேவைப்படலாம்.

(இ) ஒரு அடையாளம் காணக்கூடிய தனியான சொத்து என்பது, ஒரு வணிக இணைப்பில் ஒரு தனியான சொத்தாக ஏற்பிசைவு செய்யப்பட்ட அளவிடப்படத்தக்க எந்த ஒரு சொத்து அல்லது சொத்துக்களின் குழுவினையும் உள்ளடக்கும்.

(ஈ) ஒரு பௌதீக சொத்து மற்றொரு பௌதீக சொத்துடன் இணைக்கப்பட்டு, கணிசமான கிரயங்கள் அல்லது இரு சொத்துக்களினதும் (உதாரணமாக, காணி மற்றும் கட்டடங்கள்) பாவனை அல்லது சீர்மதிப்பில் கணிசமான குறைவு ஏற்படாத வகையில் பௌதீகரீதியாக அகற்றித் தனியாகப் பயன்படுத்தப்பட முடியாவிட்டால், (SLFRS 16 *குத்தகை* நியமத்தில் வரையறுக்கப்படி, குத்தகைக்கு உட்பட்ட ஒரு அடிப்படை சொத்திலிருந்து), அல்லது பயன்படுத்த முடியாவிடின் அவை தனியான அடையாளங் காணக்கூடிய சொத்தாகக் கருதப்படும்.

(உ) சொத்துக்கள் ஒத்த தன்மையுடையதா என மதிப்பிடும் போது, அடையாளம் காணக்கூடிய எவ்வொரு தனியான சொத்தின் தன்மையும் சொத்துக்களின் மூலமான வெளியீடுகளை உருவாக்குவதல் மற்றும் நிர்வகித்தலுடன் தொடர்புடைய இடர்களை (அதாவது இடரின் பண்புகள்) உரிமம் கருத்திற் கொள்ளும்

ஊ) பின்வருவன ஒத்த சொத்துக்களாகக் கருதப்படாது:

(i) ஒரு உருவச் சொத்து மற்றும் ஒரு அருவச் சொத்து

(ii) உப பந்தி (ஈ) இல் உள்ள மூலப்பிரமாணத்துக்கு இணங்க அவை தனியான ஒரு அடையாளம் காணக்கூடிய சொத்தாக கருதப்பட்டாலன்றி வேறுபட்ட வகுப்பைச் சார்ந்த உருவச் சொத்துக்கள் (உதாரணமாக இருப்பு, உற்பத்தி சாதனங்கள் மற்றும் வாகனங்கள்)

(iii) வெவ்வேறு வகுப்பை சேர்ந்த அடையாளங்காணத்தக்க அருவச் சொத்துக்கள் (உதாரணமாக, வர்த்தக நாமம், உரிமப்பத்திரங்கள் மற்றும் விருத்திக் கட்டத்திலுள்ள அருவச் சொத்துக்கள் )

(iv) ஒரு நிதிச்சொத்து மற்றும் ஒரு நிதியல்லாச் சொத்து

(v) வெவ்வேறு வகுப்புக்களில் உள்ள நிதிச் சொத்துக்கள் (உதாரணமாக, வருமதிக் கணக்குகள் மற்றும் உரிமை சாதனங்களிலான முதலீடு), மற்றும்

(vi) ஒரு வகுப்பினுள் உள்ள ஆனால் கணிசமாக வேறுபட்ட இடர்ப் பண்புகளைக் கொண்ட அடையாளம் காணத்தக்க சொத்துக்கள்

B7C பந்தி B7 B இல் உள்ள தேவைப்பாடுகள் LKAS 38 *அருவச் சொத்துக்கள்* நியமத்திலுள்ள ஒத்த சொத்துக்கள் குறித்த வழிகாட்டல்களை மாற்றாது, அவ்வாறே LKAS 16 *ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள்,* LKAS 38 மற்றும் SLFRS 7 *நிதிச் சாதனங்கள் : வெளிப்படுத்தல்கள்* நியமங்களிலுள்ள ''வகுப்பு'' என்ற சொல்லின் பொருளையும் மாற்றாது.

## ஒரு வணிகத்தின் கூறுகள்

B8 வணிகங்கள் வழக்கமாகவே வெளியீடுகளைக் கொண்டிருந்தாலும், வணிகமாகத் தகுதி பெற அவ் வெளியீடுகள் செயற்பாடுகள் மற்றும் சொத்துக்களின் தொகுதியாக ஒருங்கிணைக்கப்பட வேண்டிய தேவையில்லை. ~~வரையறுக்கப்பட்ட~~ வணிகத்துக்கான வரைவிலக்கணத்தில் அடையாளம் காணப்பட்ட நோக்கங்களுக்காக முகாமைசெய்யப்படவும் நிர்வகிக்கப்படவுமான இயலுமையைக் கொண்டிருப்பதற்கு, சொத்துக்கள் மற்றும் செயற்பாடுகளின் ஒன்றிணைக்கப்பட்ட தொகுதியானது இரு பிரதான கூறுகளை தேவைப்படுத்துகின்றது – ~~ஒன்றாக வெளியீடுகளை உருவாக்குவதற்கு பயன்படுத்தப்படும், உள்ளீடுகள் மற்றும் அவ் உள்ளீடுகளுக்குப் பிரயோகிக்கப்படும் செயன்முறைகள். எனினும், சந்தைப் பங்காளிகள் வெளியீட்டினை தொடர்ச்சியாக உற்பத்தி செய்வதற்கும் வியாபாரத்தினை சுவீகரிப்பதற்குமான இயலளவைக் கொண்டவர்களாக காணப்படுவார்களாயின், அனைத்து உள்ளீடுகள் அல்லது வியாபாரத்தினை தொழிற்படுத்துவதில் விற்பனையாளர் பயன்படுத்துகின்ற செயன்முறைகளை ஒரு வியாபாரமானது உள்ளடக்க வேண்டியதில்லை. உதாரணமாக, தனது சொந்த உள்ளீடுகள் மற்றும் செயன்முறைகளுடன் வியாபாரத்தினை ஒன்றிணைத்தல்.~~ எனினும், ஓர் வணிகமாகக் கருதப்படுவதற்கு, ஒருங்கிணைந்த செயற்பாடுகள் மற்றும் சொத்துக்களின் தொகுதியொன்று குறைந்தபட்சம் வெளியீட்டை உருவாக்கும் திறனுக்கு கணிசமாக பங்களிக்கும் ஒரு உள்ளீடு மற்றும் வலுவளிப்பு செயன்முறையை நிச்சயமாக உள்ளடக்கியிருத்தல் வேண்டும். பந்திகள் B12- B12D ஆகியன, ஒரு வலுவளித்தல் செயன்முறையாகக் காணப்படுகிறதா என்பதை எவ்வாறு மதிப்பிடுவது என்பதைப் பற்றிக் குறிப்பிடுகின்றது.

B8A ஒரு கையகப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் மற்றும் சொத்துக்கன் தொகுதி வெளியீடுகளைக் கொண்டிருப்பின் வருவாயின் தொடர்ச்சியானது தனியான வகையில் ஒரு உள்ளீடு மற்றும் ஒரு வலுவளிக்கும் செயன்முறை ஆகிய இரண்டும் கையகப்படுத்தப்பட்டிருப்பதைக் குறிப்பதில்லை.

B9 வணிகத்தின் கூறுகளின் இயல்பானது தொழிற்துறை மற்றும் உரிமத்தின் படிமுறை வளர்ச்சி உள்ளடங்கலான, உரிமத்தின் தொழிற்பாட்டுக் கட்டமைப்பின் மூலம் வேறுபடுகிறது. புதிய வணிகங்கள் பெரும்பாலும் குறைந்த எண்ணிக்கையிலான உள்ளீடுகள் மற்றும் செயன்முறைகளையும் மற்றும் தனியான வெளியீட்டை (பொருள்) மாத்திரம் கொண்டிருக்கும் அதேவேளை, பெயர்பெற்ற வணிகங்கள் பெரும்பாலும் பல்வேறுபட்ட வகையான உள்ளீடுகள், செயன்முறைகள் மற்றும் வெளியீடுகளைக் கொண்டிருக்கும். பொதுவாக அனைத்து வணிகங்களும் பரிப்புக்களை கொண்டிருக்கும், ஆனாலும் வணிகம் பரிப்புக்களைக் கொண்டிருக்க வேண்டியது அவசியமில்லை. மேலும், ஒரு வணிகமல்லாத ஒரு கையகப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் மற்றும் சொத்துக்களின் தொகுதி பரிப்புக்களைக் கொண்டிருக்கக் கூடும்.

B10 செயற்பாடுகளின் ஒன்றிணைக்கப்பட்ட தொகுதியும் அபிவிருத்தி மட்டத்திலுள்ள சொத்துக்களும் வெளியீடுகளை கொண்டிருக்கலாம். அவ்வாறில்லையாயின், தொகுதியானது ஒரு வியாபாரமாக காணப்படுகிறதா என்பதனை தீர்மானிப்பதற்கு சுவீகரிப்பவர் ஏனைய காரணிகளை கவனத்தில் கொள்ள வேண்டும். அக்காரணிகள் உள்ளடக்குகின்ற ஆனால் வரையறுக்கப்படாதவையாக காணப்படுகின்றவையாவன:

(அ) தொகுதியானது திட்டமிடப்பட்ட பிரதான செயற்பாடுகளை தொடங்கியுள்ளதா;

(ஆ) தொகுதியானது ஊழியர்கள், அறிவுசார் ஆதனம், ஏனைய உள்ளீடுகள் மற்றும் அவ் உள்ளீடுகளுக்கு பிரயோகிக்கப்படக்கூடிய செயன்முறைகளை கொண்டுள்ளதா;

(இ) தொகுதியானது வெளியீடுகளை உற்பத்தி செய்வதற்கான திட்டத்தினை தொடர்ந்து கொண்டு செல்கின்றதா;

(ஈ) தொகுதியானது வெளியீடுகளை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களை அடைவதற்கான இயலுமையை கொண்டுள்ளதா.

வியாபாரமாக தகுதியுடையதாவதறகு வளர்ச்சி மட்டத்திலுள்ள குறித்த செயற்பாடுகள் மற்றும் சொத்துக்களின் ஒன்றிணைக்கப்பட்ட தொகுதிக்கான மேலுள்ள அனைத்து காரணிகளையும் சமர்ப்பிக்க வேண்டியதில்லை. (நீக்கப்பட்டுள்ளது)

B11 குறித்த செயற்பாடுகளினதும் சொத்துக்களினதும் நடவடிக்கைகளினதும் தொகுதியானது வணிகமாகக் காணப்படுகின்றதா என்பதனை தீர்மானிப்பதானது, ஒன்றிணைக்கப்பட்ட தொகுதியானது சந்தைப் பங்காளியினால் வியாபாரமாக நிர்வகிப்பதற்கும் முகாமை செய்வதற்குமான இயலளவை கொண்டுள்ளதா என்பதை அடிப்படையாகக் கொள்ள வேண்டும் கொள்ளும். எனவே, குறித்த தொகுதியானது வியாஎபாரமாக காணப்படுகிறதா என்பதை மதிப்பிடுவதில், விற்பனையாளர் வியாபாரமாக குறித்த தொகுதியினை தொழிற்படுத்தினாரா அல்லது சுவீகரிப்பவர் வியாபாரமாக குறித்த தொகுதியினை தொழிற்படுத்துவதற்கு கருதுகின்றாரா என்பது பொருத்தமானதாக காணப்படுவதில்லை.

## கையகப்படுத்தப்பட்ட செயன்முறை வலுவளிப்பதா என மதிப்பிடல்

B12 ஆதாரங்களற்றதற்கு மாறாக, நன்மதிப்பானது காணப்படுகின்ற குறித்த சொத்துக்கள் மற்றும் நடவடிக்கைகளின் தொகுதியானது வியாபாரமாகக் கொள்ளப்பட வேண்டும். எனினும், வியாபாரமொன்று நன்மதிப்பினை கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. கையகப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் மற்றும் சொத்துக்கள் வெளியீடுகளைக் கொண்டிராத போதும், (பந்தி B12B) மற்றும் வெளியீடுகளைக் கொண்டிருக்கும் போதும் (பந்தி B12 C) கையகப்படுத்தப்பட்ட செயன்முறை வலுவளிப்பதா என்பதை எவ்வாறு மதிப்பிடுவது என்பதற்கான விளக்கங்களை பந்தி B12A - B12D விளக்குகின்றன.

B12A கையகப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் மற்றும் சொத்துக்கள் கையகப்படுத்தல் திகதியில் வெளியீடுகளைக் கொண்டிராது இருப்பதற்கான உதாரணமாக ஒரு வருமானம் உழைக்கத் தொடங்காத ஆரம்பகட்ட உரிமம் ஒன்றைக் கொள்ள முடியும். மேலும், கையகப்படுத்திய தொகுதி நடவடிக்கைகள் மற்றும் சொத்துக்கள் கையகப்படுத்தும் திகதியில் வருமானம் உழைத்தால், பிற்பட்ட காலங்களில் அது வெளிவாரி வாடிக்கையாளர்களிடமிருந்து வருமானத்தை ஈட்டாது என்றாலும், உதாரணமாக அது கையகப்படுத்துபவரினால் ஒன்றிணைக்கப்படுதல், அது அந்த திகதியில் வெளியீடுகளைக் கொண்டிருப்பதாகக் கருதப்படும்.

B12B கையகப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் மற்றும் சொத்துக்கள் கையகப்படுத்தல் திகதியில் வெளியீடுகளைக் கொண்டிராவிட்டால், கையகப்படுத்திய செயன்முறை (அல்லது செயன்முறைத் தொகுதிகள்) பின்வருவனவற்றினைத் திருப்தி செய்தால் மாத்திரமே வலுவளிப்பதாகக் கருதப்படும்.

அ) கையகப்படுத்திய உள்ளீட்டை அல்லது உள்ளீடுகளை வெளியீடாக விருத்தி செய்ய அல்லது மாற்றம் செய்யும் இயலுமைக்கு இது முக்கியமானது, மற்றும்

ஆ) கையகப்படுத்தப்பட்ட உள்ளீடுகள் அந்த செய்முறையை (அல்லது செயன்முறைகளின் தொகுதியை) செயற்படுத்தத் தேவையான திறன்கள் அறிவு அல்லது அனுபவம் மிக்க

ஒழுங்கமைக்கப்பட்ட ஊழியர்கள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட ஊழியர்களால் விருத்தி செய்யக்கூடிய அல்லது வெளியீடுகளாக மாற்றக்கூடிய பிற உள்ளீடுகள் ஆகியவற்றை உள்ளடக்கும். அந்த பிற உள்ளீடுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கலாம்:

(i) ஒரு பொருள் அல்லது சேவையை உருவாக்கப் பயன்படும் புலமைச் சொத்து

(ii) வெளியீடுகளை உருவாக்க, விருத்தி செய்யக் கூடிய பிற பொருளாதார வளங்கள், அல்லது

(iii) எதிர்கால வெளியீடுகளை உருவாக்க உதவும் தேவையான மூலப்பொருட்கள் அல்லது உரிமைகளுக்கான அணுகலைப் பெறுவதற்கான உரிமைகள்

துணைப்பந்திகளில் குறிப்பிட்டுள்ள உள்ளீடுகளின் உதாரணங்கள் (b) (i) - (iii) தொழிநுட்பம் செயற்பாட்டில் உள்ள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி திட்டங்கள், மெய்ச்சொத்துக்கள் மற்றும் கனிய உரிமைகள் ஆகியவற்றை உள்ளடக்கும்.

B12C கையகப்படுத்தும் திகதியில் ஒரு தொகுதி நடவடிக்கைகள் மற்றும் சொத்துக்கள் வெளியீடுகளை கொண்டிருப்பின், கையகப்படுத்திய உள்ளீடு அல்லது உள்ளீடுகள் மீது பிரயோகிக்கப்படும் போது கையகப்படுத்திய செயன்முறையானது (அல்லது செயன்முறைகளின் குழு) வலுவளிப்பதாகக் கருதப்படும்.

அ) வெளியீடுகளைத் தொடர்ந்தும் உருவாக்கும் திறனுக்கு முக்கியமானதாக இருப்பதுடன், கையகப்படுத்தப்பட்ட உள்ளீடுகளில் அந்தச் செயன்முறையைச் (அல்லது செயன்முறைகளின் தொகுதி) செய்யத் தேவையான திறமை, அறிவு அல்லது அனுபவத்துடன் கூடிய ஒழுங்கமைக்கப்பட்ட ஊழியர்கள் உள்ளடக்கப்பட்டிருத்தல், அல்லது

ஆ) வெளியீடுகளைத் தொடர்ந்தும் உருவாக்கும் திறனுக்குக் கணிசமாகப் பங்களித்தல், மற்றும்

(i) தனித்துவமான அல்லது அருமையானதாகக் கருதப்படுதல், அல்லது

(ii) வெளியீடுகளைத் தொடர்ந்து உருவாக்கும் திறனில் கணிசமான கிரயம், முயற்சி அல்லது காலவிரயமின்றி மாற்ற முடியாத தன்மை.

B12D பின்வரும் மேலதிக விவாதங்கள் B12B மற்றும் B12C (ஆகிய இரண்டு பந்திகளை ஆதரிக்கின்றது).

அ) கையகப்படுத்தப்பட்ட ஒப்பந்தமானது ஒரு உள்ளீடேயன்றி, ஒரு வலுவளிக்கும் செயன்முறையல்ல. இருந்தபோதிலும் கொள்வனவு ஒப்பந்தம், உதாரணமாக ஒப்பந்தப் புற வழங்கலிலான ஆதன முகாமைத்துவ ஒப்பந்தம் சொத்து முகாமைத்துவ ஒப்பந்தங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட ஊழியர்களுக்கான அணுகல்களை வழங்கும். அத்தகைய ஒரு ஒப்பந்தத்தின் மூலம் அணுகப்பட்ட ஒரு ஒருங்கமைக்கப்பட்ட ஊழியப்படையானது உரிமம் கட்டுப்படுத்தும் ஒரு வலுவளிப்பு செயன்முறையைச் செய்கின்றதா என உரிமம் மதிப்பீடு செய்யும், அதன்படி கையகப்படுத்தப்பட்டதாகக் கொள்ளப்படும். இந்த மதிப்பீட்டைச் செய்வதில் ஒப்பந்தத்தின் காலப்பகுதி மற்றும் அதன் புதுப்பித்தல் விதிமுறைகள் ஆகிய காரணிகள் உள்ளடக்கப்படும்.

ஆ) கையகப்படுத்திய ஒருங்கமைக்கப்பட்ட ஊழியர்களைப் பதிலீடு செய்வதில் உள்ள சிக்கல்கள் கையகப்படுத்தப்பட்ட ஒழுங்கமைக்கப்பட்ட ஊழியர்கள் வெளியீடுகளை உருவாக்கும் திறனுக்கு முக்கியமான ஒரு செயன்முறையைச் செய்கிறார்கள் என்பதைக் குறிக்கலாம்.

இ) உதாரணமாக, வெளியீடுகளை உருவாக்கத் தேவையான அனைத்து செயல்முறைகளின் பின்னணியில் குறித்த செயன்முறை துணையானதாக அல்லது சிறியதாக இருப்பின் அச் செயன்முறை (அல்லது செயன்முறைகளின குழு) முக்கியமானதல்ல.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.